RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s216

OPEN ACCESS

# இலக்கியம் சுட்டும் திணைச்சார்ந்த இறைநெறி

## ஜெ. ஜெயபிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா

# Literary Pointing the Theology of Dinai

## J. Jeyapriya [a, *]

[a] Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli-620002, Tamil Nadu, India.

* Corresponding Author: rubadevi.a@gmail.com

Received: 04-01-2021
Revised: 12-04-2021
Accepted: 17-04-2021
Published: 30-04-2021

Check for updates

### ABSTRACT

It is believed that the delights of individuals, good and bad, wealth, loss, success, failure, sin, and homelessness were totally given by God. So individuals prayed God to manage them to procure every one of the expectation for their lives. The instinctive and level headed man was convinced that there was a prevalent heavenly object that combined the world movement, creation, human existence, and the world life that encompassed him to acquire civilization. They have considered that the object is influenced by love, beyond human thoughts, and that it drives everything. They have realized that the Supreme Lord is the Lord. This article inspects the theology in the way of writing alludes to it.

**Keywords:** Nature, World, Divine theology, People, Lands.

## திணை பொருள்

திணை எனும் சொல்லிற்கு “குலம் நிலம் ஒழுக்கந் திணையே” எனப் பொருள் விளக்கம் தருகிறது பிங்கலநிகண்டு. திணை என்பது ஐந்திணை நிலத்தை மட்டும் குறிக்கவில்லை. மாறாக, குலம், நிலம், ஒழுக்கம் மூன்றும் இணைந்து நிற்கும் தன்மையைக் குறிப்பிடுகிறது.

இதில் குலம் என்பது நிலத்திற்குரிய மக்கள் என பொருள்படும். இதனால் திணை என்பது மக்களின் வாழ்வியலோடு தொடர்புடையது. நிலப்பகுதியானது மக்கள் வாழ்வியலும், நிலச்சூழலும் இணைவதால் வெளிப்படும் நெறிமுறைகளை வகுக்கின்ற எண்ணப்போக்கு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாக திணை அமைகின்றது.

## இறைமை பண்பு

இறை வழிபாடு என்பது மக்களின் உள்ளுணர்வோடு தொடர்புடையது. அன்றையக் காலத்திலிருந்து இன்றையக் காலம் வரை இறைநம்பிக்கையில் ஆழ்ந்து ஈடுபட்டுள்ளனர்.

எனவே நிலத்திற்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் மக்களின் உணர்ச்சிகள் அமைவது இயல்பு. அவ்வகையிலேயே இறைவழிபாடு அமைந்துள்ளதை தொல்காப்பியம் நானில வழிபாடு தெய்வத்தைக் குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றது.

முல்லை நிலம் - மாயோன் - திருமால்

குறிஞ்சி நிலம் - சேயோன் - முருகன்

மருதம் நிலம் - வேந்தன் - இந்திரன்

நெய்தல் நிலம் - வருணன் - வருணன்

பாலை நிலம் - கொற்றவை - காளி

என மலை, காடு, வயல், கடல், மணல் என இயற்கைச் சூழ்ந்த பகுதியின் வடிவமே இறை அம்சமாக திகழ்வதைக் காணமுடிகின்றது.

திருமால் வழிபாட்டினைப் பற்றி பரிபாடல் குறிப்பிடுவதன் மூலம், இயற்கையும், இறைவனும் ஒன்றுதான் என்பதை,

"தீயினுள் தெறல் நீ: பூவினுள் நாற்றம் நீ

கல்லினுள் மணியும் நீ: சொல்லினுள் வாய்மை நீ:

அறத்தினுள் அன்பு நீ: மறத்தினுள் மைத்து நீ:

வேதத்து மறை நீ: பூதத்து முதலும் நீ:

வெஞ்சுடர் ஒளியும் நீ: திங்களுள் அளியும் நீ:

அனைத்தும் நீ: அனைத்தினுள் பொருள் நீ" (பரிபாடல்-3, 63-68)

என்ற பரிபாடலால் இறைமைப் பண்புகள் இயற்கைபால் ஒளிர்ந்துள்ளமையைக் கண்டுணரமுடிகின்றது. எனவே இயற்கையையே தெய்வமாக வழிபட்டதை அறியமுடிகிறது.

## இயற்கை வழிபாடு

### பாலை நிலம்

பொருள்; காரணமாக பிரிந்து சென்றுள்ளான் தலைவன். அவன் சென்ற வழி பாலை நிலம். கடும்வெப்பம் மிகுந்த பகுதி. அவ்வெப்பத்தினால் தலைவன் துன்பப்படுவான் எனவுணர்ந்த தலைவியானவள்,

1. பாலைநிலத்தின் வெப்பம் குறைந்து குளிர்ச்சிப்பெற நீர்த்துளிகளைத் தருவாயாக என மேகத்தை வழிபடுவதையும்
2. மரங்கள் வாடும்படி வெப்பம் மிகுந்துள்ளதால் ஞாயிற்றை இரந்து வேண்டினால் மழை வரும். வெம்மை குறையும் என ஞாயிறை வழிபட்டதையும்,
3. வெப்பக்காற்றைக் குறைத்து குளிர்ந்த காற்றை வீசும்படி காற்றுக் கடவுளை வழிபடுவதையும்

'கன்மிசை யுருப்பறக் கனைதுளி சிதறென

இன்னிசை யெழிலியை இரப்பவும் இயைவதோ?

முளிமுதன் மூழ்கிய வெம்மை தீர்ந் துறுகென

வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மியைவதோ" (கலித்தொகை-16: 7-8, 15-16)

என்ற கலித்தொகைப் பாடலால் தன் தலைவன் நலன்வேண்டி மேகம், ஞாயிறு, காற்று என்று இயற்கையை வழிபாடு செய்ததை உணர்த்தி நின்றது.

## நெய்தல் நிலம்

இளவேனிற் காலத்தின் வருகையைக் கூறும்போது நீர்க்கரையில் பலதேவனைப் போல வெண்கடம்ப மரமும், கதிரவனைபோல செருந்தி மலரும், மன்மதனை போல காஞ்சி மரமும், சிவனை போல இலவமரமும், பாண்டவர்களின் நிறத்தைப் போல பூக்கள் சோலையில் விரிந்து காணப்பட்டது என,

"ஒரு குழை ஒருவன் போல், இணர் சேர்ந்த மராஅமும்,

பருதிஅம் செல்வன் போல், நனை ஊழ்த்த செருந்தியும்,

மீன் ஏற்றுக் கொடியோன் போல், மிஞிறு ஆர்க்கும் காஞ்சியும்" (கலித்தொகை-26, 1-3)

பலதேவன், கதிரவன், மன்மதன், சிவன் போன்ற தெய்வங்களை இளவேனிற்காலத்தில் இயல்பாக பூக்கும் பூக்களின் தன்மையை இறைவனுடன் ஒப்பிட்டு கூறுவதிலிருந்து இறைவுணர்வுஇயற்கையோடு இயைந்ததை அறியமுடிகின்றது.

"தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை வாங்கு மடற் குடம்பை" (நற்றிணை-303: 3-4)

நெய்தல் நில மக்கள் பனைமரத்தில் இறைவன் இருப்பதாக நம்பியதை எடுத்துக்காட்டுகிறது.

தம் குலத்தெய்வத்தையும், ஊர் பொது தெய்வத்தையும் பனையிலேற்றுவித்து வணங்கி வருவது தொன்று தொட்டு வரும் நெய்தல் நிலத்து வழக்கம். இது இன்று பனையடி கருப்பு என்று சில குலத்தவரின் குலத்தெய்வமாக வணங்கப்பட்டு வருகின்றது.

"மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்

கொடியோர்த் தெறூஉம் என்ப" (குறுந்தொகை-87: 1-2)

என்ற குறுந்தொகை பாடலால், கொடிய தன்மை உடையவரை கொல்லும் தன்மை உடைய தெய்வம் செங்கடம்ப மரத்தில் உறைவதாக மக்கள் நம்பிய நிலையை எடுத்துக்காட்டுகிறது.

## வழித்துணையாகும் இறைவன்

நாம் செய்யும் செயலுக்கு உறுதுணையாக ஒன்று இருக்க வேண்டும்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்" (குறள்-619: அதிகாரம்-62)

ஒரு செயல் வெற்றி பெற தெய்வத்தின் துணையும், விடாமுயற்சியும் தேவை என்கின்றது குறள். இதனை,

"அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்

வழிபடு தெய்வம் கண்கண்டாஅங்கு" (நற்றிணை-9: 1-2)

என்ற நற்றிணை பாடல் தெய்வத்தை நேரில் கண்டுஇ வரம் பெறுதல் போன்று தான் எடுத்துக் கொண்ட செயலில் சிதைவுறாத செயலினால் தெய்வத்தின் துணையால்இ விரும்பியதை செயல்படுத்த முடியும் என தான் விரும்பியவற்றை பெற்றனர். இறைவனை நேரில் கண்டது போன்ற மகிழ்வை வெளிபடுத்தும் விதமாக நம்பிக்கையுடன் செய்த செயலினால் பெற்ற வெற்றியானது இறை உணர்வைஉணர்த்தி நின்றது.

தலைவனுடன் உடன்போக்கு மேற்கொள்ளும் தலைவி பாலைவனத்தில் அரிதாக இருக்கும் நிழலைக் கண்டவுடன் இறைவனை நேரில் கண்டால் பெரும்இ மனமகிழ்வை வெளிப்படுத்துகிறாள். பாலை நிலத்தில் இளைப்பாறுவதற்கு அரிதாக இருக்கும் நிழலைக் கண்டதுஇ காணமுடியாத

இறையை நேரில் கண்டால் வரும் இன்பத்தினை உரைப்பதால் இறையை உணர்ந்தால் அறியமுடியும் என்கின்றது.

“வழிபட்ட தெய்வம்தான் வலிஎனச் சார்ந்தார் கண்

கழியும் நோய் கைம்மிக அணங்கு ஆகியது போல” (கலித்தொகை - 132)

என்ற கலித்தொகைப் பாடலால்

தனக்கு வலிமை தரும் என்று பணிந்து வழிபட்ட தெய்வம் தனக்கு துன்பத்தைச் செய்தால் என் செய்வது என புலம்பும் இப்பாடல் வழி துன்பம் வரும்போது மேலும் வருத்திய நிலையில் காணப்படுவதால் தம் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இறைவனையே காரணமாக்கி வழிபடுகின்ற முறையைக் காணமுடிகின்றது.

வழிபாட்டில் பல்வேறு கூறுகள் கடைப்பிடிக்கப்பட்டு உள்ளன. பலியிடுதல்இ வெறியாட்டுஇ படிவ உணவு உண்ணுதல்இ சடங்குகள் என்ற முறைகளில் அமைந்ததைக் காணமுடிகின்றது.

## வெறியாட்டு: குறிஞ்சி நிலம்

சங்க காலத்தில் குறிஞ்சி நில மக்களிடத்தில் வெறியாட்டு என்னும் வெறிக்கூத்து மிகப்பெரிதும் பரவியிருந்தது. ‘வெறி’ எனும் சொல் தெய்வத்தைக் குறிப்பதாகும். இறைவன் இடத்து பற்றுக் கொண்டவர் மீது தெய்வம் வெளிப்படும் என்ற உறுதியான நம்பிக்கையில் இறையுணர்வுடன் விளங்கினர். வேலை கையில் ஏந்திக்கொண்டு முருகப் பெருமானைப் போற்றி அழைக்கின்றனர். தெய்வம் ஏறிய வேலன் என்பவன் வெறியாட்டு ஆடுவான்.

“வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட் டயர்ந்த காந்தளும்” (தொல்காப்பியம் - பொருள்-63: 1-2)

என்று தொல்காப்பியம் வெறியாட்டு நிகழ்வைக் குறிப்பிடுகின்றது. வெறியாடல் இயலை உணர்ந்தவன் வேலன் என்னும் பெயருடையவன் என்றும்இ வெறியாட்டிற்கு காந்தள் என்றொரு பெயரும் உண்டென்றும் என்பனவற்றை அறிவுறுத்துகிறது.

காம வேட்கையின் ஆற்றாளாகிய பெண்பாற் பக்கமாகிய வெறியும்இ அந்நிலத்துள்ளார் வென்றி வேண்டி ஆடும் வெறியும் கொள்ளப்படும். இதனைஇ

“வெய்ய நெடிதுயரா வெற்பன் அளிநினையா

ஐய நனிநீங்க ஆடினாள் - மையல்

அயன்மனைப் பெண்டிரோடு அன்னைசொல் அஞ்சி

வியன் மனையுள் ஆடும் வெறி” (மேலது, இளம்பூரணனார் உரை ப.80)

என காம வேட்கை தாங்காமல் தலைமகள் தானே முருகன் மேல் நின்று ஆடிய வெறியாட்டு பற்றிக் குறிப்பிடுகின்றது.

## மழை வர வேண்டுதல்

இறைவுணர்வுடன் வேண்டுதல்கள் பல இருந்தன. அதில் பொதுநலம் கருதி வேண்டி வழிபட்டமையும் இங்கு சுட்டப்பட இருக்கிறது.

மக்கள் அனைவரும் இயற்கையொடு இணைந்து வாழ்வு நடத்தினர். மணல், புனல், கனல், கால், ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களும் நற்குணமுடைய மக்களின் குரலுக்கு செவிசாய்த்தன.

குன்றகுற மக்கள் மழை வேண்டும் என வேண்டும் பொழுது மேகத்தைப் பார்த்து ஆர்ப்பரித்தனர். மழையும் பொழிந்ததை,

"குன்ற குறவன் ஆர்ப்பின் எழிலி

நுண்பல் அழி துளி பொழியும் நாட!" (ஐங்குறுநூறு-251: 1-2)

ஆரவாரம் செய்தால் மழை வரும் என்ற பழங்கால நம்பிக்கையினை பரிபாடல் வெளிப்படுத்துகிறது.

"நெல் அறுவடை முடிந்து, கதிரை அடித்து நெல்மணிகளைத் தூற்றும்போது, கீழ்க்கை ஒலியெழுப்பினால் காற்று விரைவாக வீசும் என்ற நம்பிக்கையும்,'புலிபுலி' என்று ஆரவாரித்தால் வேங்கை மரம் தன் கிளைகளைத் தணித்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையும் இன்றும் வழக்கத்தில் உள்ளத்தினை உணர்த்துகின்றன."[1] (மேலது, ப.536)

"மழையே பெய்க" என்று மேகத்திற்கு பலியிட்டு மழை வேண்ட மழை பெய்ததும், பின் பெரிய பலத்த மழையால் இடர்ப்பட்ட குறவர்கள் மழைநிற்க! என வேண்டி மீண்டும் பலியிட்டு மழையை நிற்கச் செய்த நிகழ்வினையும்,

"மலைவான் கொள்க! என உயர் பலி தூஉய்

மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க! எனக்

கடவுட் பேணிய குறவர் மாக்கள்,

பெயல் கண் மாறிய உவகையர்" (புறம்-143: 1-4)

எனவரும் பரிபாடலில் மழை இல்லாத காலத்து மழை வேண்டியும், நிறைந்த மழைப்பொழிவு நேரத்தில் மழை குறைவதற்காக பலியிட்டு வழிபட்ட மரபையும், மக்கள் இயற்கைமீது வைத்திருந்த நம்பிக்கையும், இயற்கையோடு இரண்டற கலந்த உணர்வினையும் வெளிப்படுத்துகின்றது.

மருதநிலத்து மக்கள் மழை வேண்டி சங்கு, நண்டு, இறவு, வாளை போன்ற நீர்வாழ் உயிரினங்களை வையையில் இட்டால் நீர்பெருகும், மழைபொழியும் என்ற நம்பிக்கை,

"நத்தொடு, நள்ளி, நடைஇறவு, வய வாளை,

வித்தி அலையில், விளைக, பொலிக!" (பரிபாடல்-10: 85-86)

பரிபாடலில் பொன்னால் செய்த நண்டு முதலிய நீர்வாழ் உயிரினங்களின் உருவத்தை நீரில் காணிக்கைப் பொருளாக இட்டு, விளைச்சல் பெருக, உலகம் சிறக்க வேண்டும் என்று வேண்டியதை எடுத்துக்காட்டுகிறது,

நெய்தல் நிலத்தில் மக்கள் மழை வேண்டி பௌர்ணமி அன்று தாழையாடை உடுத்தி பனித்துறையை வழிபட்டனர். அத்துறையில முத்தையும், வலம்புரியினையும் வைத்து வழிபட்டனர்.

"அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து,

தழைஅணிப் பொலிந்த கோடுஏந்து அல்குல்

பழையர் மகளிர் பனித்துறைப் பரவ" (அகம்-201: 5-7)

என்பதை அகநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது.

## முடிவுரை

மனிதன் இறை நம்பிக்கையை மையமிட்டே சில பழக்கவழக்கங்களைப் பின்பற்றினர். அவரவர் வாழும் சூழ்நிலைக்கேற்ப கிடைக்கும் பொருட்களைக் கொண்டு இறைவனை வழிபட்டனர். மக்கள் பின்பற்றும் அனைத்து பழக்கவழக்கங்களுக்கும் அடிப்படை இறைநம்பிக்கையாக அமைகின்றது. எனவே,

இயற்கையின் ஒவ்வொரு பொருளையும் இறைவடிவமாகக் கண்டு வழிபடலாயினர் எனலாம். இறைவுணர்வுடன் வேண்டுதல்கள் பல இருந்தன. அதில் பொதுநலம் கருதி வேண்டி வழிபட்டமையும் இங்கு சுட்டப்பட இருக்கிறது. மக்கள் அனைவரும் இயற்கையொடு இணைந்து வாழ்வு நடத்தினர். மணல், புனல், கனல், கால், ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களும் நற்குணமுடைய மக்களின் குரலுக்கு செவிசாய்த்தன. குன்றகுற மக்கள் மழை வேண்டும் என வேண்டும் பொழுது மேகத்தைப் பார்த்து ஆர்ப்பரித்தனர். மழையும் பொழிந்ததை ஆரவாரம் செய்தால் மழை வரும் என்ற பழங்கால நம்பிக்கையினை பரிபாடல் வெளிப்படுத்துகிறது.

## References

Sangam literature, Eight anthologies, New century book house, Chennai, India

Gowmariswari, S., (2011) Tholkappiyam porulathikaram, Ilampuranar urai, Saradha pathippagam, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License